DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NANNILAM

| | | |
|---|---|---|
| Case No. | : | DVC No. 7/2023 |
| Deposition of witness | : | PW – 1 |
| Name | : | லாவண்யா |
| Father's /Husband Name | : | ராமகிருஷ்ணன் |
| Village | : | ஏனைக்குடி |
| Taluk | : | நன்னிலம் |
| Age | : | 31 |
| Occupation | : | இல்லத்தரசி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 17th day October 2024.
Respondent present.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

எதிர்மனுதாரர் இவ்வழக்கில் என்ன எதிர் வழக்கு நடத்துகிறார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். எதிருரையிலுள்ள விவரங்கள் சரியானவை என்றால் சரியல்ல. மனுவில் கூறியுள்ள நகை மற்றும் பொருட்கள் குறித்து கூறப்பட்டுள்ள விவரங்கள் மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது கணவர் வீட்டில் ஒரு நகை காணாமல் போனது என்றால் சரிதான். அது குறித்து எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம் என்றால் சரிதான். நகை காணாமல் போனதற்காக கோவிலுக்கு சென்று குறி பார்த்தோம் என்றால் சரிதான். அதன்பிறகு அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்று ஒரு புகார் அளித்தேன் என்றால் சரிதான். அது தொடர்பாக காவல் நிலையத்தில் எங்களை அழைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் வாங்கியை சொத்துப்பட்டியலில் காணாமல் போன நகை பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டோம். நான் அளித்த புகாருக்கு காவல் நிலையத்தில் மனு ரசீது கொடுத்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்திலே அளித்த மனு ஏற்பு ரசீதியில் கணவருடன் ஏற்பட்ட பிரச்சனை பற்றி மட்டும் தான் கொடுத்தேன் என்றால் சரிதான் ஆனால் புகார் அளித்தது நகை தொடர்பாகவும் சேர்த்து தான் அளித்தது. புகாரை பார்த்தால் தான் அதில் கூறப்பட்டுள்ள விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். நான் என் அம்மா வீட்டிற்கு செல்ல வேண்டுமென்றால் எதிர்மனுதாரர் தான் அழைத்து செல்வார் என்றால் இல்லை பேருந்தில் மட்டும் தான் ஏற்றிவிடுவார். சுமூகமான முறையில் தான் நான் எனது அம்மா வீட்டிற்கு சென்று வருவேன் என்றால் சரிதான். நான் கருவுற்றிருந்த நிலையில் எனக்கு வேண்டிய உதவிகளை எதிர்மனுதாரரும் அவரது குடும்பத்தார்களும் செய்வார்கள் என்றால் சரியல்ல நான் தான் செய்துகொள்வேன். நான் மனுவிற்காக அவ்வாறு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வளைகாப்பு விழாவானது எதிர்மனுதாரர் வீட்டில் தான் நடந்தது என்றால் சரிதான். வளைகாப்பு முடிந்து நல்ல முறையில் தான் என் வீட்டிற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால் சரியல்ல பிரச்சனை செய்து தான் அனுப்பி வைத்தார்கள். எதிர்மனுதாரர் வரதட்சனை கேட்டதாக நான் மிகைப்படுத்தி பொய்

சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரசவத்திற்கு முன்பே எதிர்மனுதாரர் மருத்துவமனையில் வந்து பார்த்தார் என்றால் இல்லை நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தினத்தன்று தான் வந்தார். சிகிச்சையிலிருந்து விடுவித்து நான் வீடு செல்லும் வரை எதிர்மனுதாரர் என்னுடன் தான் இருந்தார் என்றாலும் என்னை வீட்டில் விட்டு விட்டு தான் சென்றால் என்றாலும் சரிதான். நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எதிர்மனுதாரரின் குடும்பத்தினரும் வந்தார்கள் என்றால் சரிதான். மருத்துவமனையில் நல்ல முறையில் எதிர்மனுதாரர் குடும்பத்தினர் பேசினார்கள் என்றால் சரிதான். குழந்தை பிறந்த 16 வது நாள் நிகழ்ச்சியின் போதும் நல்ல முறையில் எதிர்மனுதாரர் குடும்பத்தினர் பேசினார்கள் என்றால் சரிதான். நல்ல முறையில் தான் பெயர் சூட்டு விழா முடிந்தது என்றால் இல்லை பிரச்சனையுடன் தான் முடிந்தது. நான் பிரச்சனை நடந்ததாக பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குழந்தை பிறந்த பிறகு என்னை அவரது வீட்டிற்கு அழைத்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் பேசி அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். எனது பெரியம்மா மகன் தயாநிதி என்பவர் வந்து பேசி அழைத்துச் சென்றார்கள் என்றால் சரிதான். எனது வீட்டு நபர்கள் தங்குவது போல் எதிர்மனுதாரர் எங்கள் வீட்டில் தங்கியது தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் அவர் அவ்வாறு தங்கியதே இல்லை. எனது அக்காவின் கணவர் எங்கள் வீட்டிற்கு வந்து தங்குவார்கள் என்றால் சரிதான். அக்காவின் கணவர்கள் வேலை செய்வது போல் எதிர்மனுதாரர் வேலை செய்யாததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் மன்னிப்பு கேட்டு அழைத்துச்சென்றதாக குறிப்பிட்ட நிலையில் யார் முன்னிலையில் மன்னிப்பு கேட்க்கப்பட்டதென்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்பதால் தான் யார் முன்னிலையில் மன்னிப்பு கேட்க்கப்பட்தென்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வீட்டில் நான் போன் பேசும்போது சுதந்திரமாக பேசினேன் என்றால் சரியல்ல, நான் போன் பேசியதால் தான் என் போனை வாங்கி வைத்துக்கொண்டார்கள். பெயர் சூட்டு விழாவிற்கு எதிர்மனுதாரர் வீட்டிலிருந்து நகை கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். அந்த நகை போதுமானதாக இல்லையென்ற காரணத்தினால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல, எங்கள் வீட்டில் கொலுசு மற்றும் அருணாக்கொடி போட்டதால் தங்க நகை போடவில்லை என்று பிரச்சனை செய்து அடித்தார். மேற்படி பிரச்சனை செய்ததாக நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது –**

(ஓம். M.S. பாரதிதாசன்)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், நன்னிலம்.